1974 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நல்ல யோசனைதான். நிலம் ஏற்கனவே குறைந்த அளவில் இருக்கிறது என்பதற்காகத்தான் இருக்கிற இடங்களில் காடுகளை வளர்க்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. எல்லோருடைய ஒத்துழைப்பின் பேரிலும் ஆக்கிரமிப்பைத் தடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் இருக்கிறது.

முந்திரித் தோட்டங்கள் ஏலம்

*290 வினா : திரு. என். இட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசுக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள் ஏலத்திற்கு விடப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்தப் பகுதிகளில்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :

(அ) ஆம்.

(இ) விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முந்திரித் தொழிற்சாலைகள் பல நம் மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு முந்திரிப் பருப்பு கிடைப்பதில் கஷ்டமிருக்கிறது. ஆதலால் ஏலம் விடப்படுகிற நேரத்தில் இங்கு இயங்கும் தொழில் நிறுவனங்களுக்கு முன் உரிமை கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏலம் விடுகிற முறையைக் குறைத்து அரசே கொள்முதல் செய்யலாமா என்று ஏற்பாடு செய்து பல மாவட்டங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் குத்தகைக்கு விடும் ஏற்பாடு இருக்கிறது. நாளா வட்டத்தில் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த அறிக்கையில் திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்கள் மட்டும் தான் இருக்கின்றன. புதிதாக அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்திரித் தோட்டங்கள் அதிகமாக உள்ளன. அவற்றை மேலும் விரிவுபடுத்தி இம்மாதிரி ஏலத்திற்கு விடுவதற்கான ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு ஏதாவது ஆலோசனை உண்டா ?

---

* 97ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கெனவே 86,000 ஏக்கர் நிலங்களில் முந்திரிச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திருச்சி, புதுக் கோட்டை மாவட்டங்களில் 65,000 ஏக்கர் நிலங்கள் முந்திரி உற்பத்தி செய்யும் திட்டம் இப்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நம் மாநிலத்தில் உள்ள முந்திரித் தொழிற்சாலை களுக்கு போதிய முந்திரிப் பருப்பு ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது. இப்போது வருவதில்லை யென்று கேள்விப்படுகிறோம். அதோடு கூட பருப்பின் விலையும் அதிகமாகியிருக்கிறது. எனவே, முந்திரிப் பருப்பை அதிகம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதை ஒரு பேஸ்ட் ப்ரோக் ராமாக, இவ்வளவு ஏக்கர் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. 86,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. இன்னும் ஒரு 50,000 அல்லது 60,000 ஏக்கர் முந்திரி சாகுபடிக்கு விஸ்தரிக்க வேண்டுமென்ற திட்டம் நமக்கிருக்கிறது.

THIRU N. K. PALANISWAMY : Sir is it fair on the part of the Hon. Speaker to provide Congress (O) and Congress (R) members separate seat and blocks while their respective leaders them selves and including a member of the House have declared........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிவுற்றதாக நான் அறிவிக்கவில்லையே ? நீங்கள் கேள்வி கேட்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன்.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1974-75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of Order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் பழனிசாமி அவர்கள் எழுப்புவார்கள்.